1972 மார்ச் 24]

*686 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவாரூர் புகைவண்டி நிலையம் அருகில் உள்ள லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டுவதற்கு திருவாரூர் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா :—தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளில் பாலங்கள், மேம்பாலங்கள் அமைவதற்கு மூலகாரணமாக இருக்கும் திருவாரூரில் ஒரு மேம்பாலம் கட்ட அரசு ஆலோசிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற ஒரு கோரிக்கை நகராட்சி மன்றத்திலிருந்து வரவில்லை. கோரிக்கை வந்த பிறகு அது பற்றி பரிசீலிக்கலாம்.

ஏலகிரி மலையில் சின்கோனா பயிரிடுதல்

*687 வினா—திரு. எம். ஏ. லத்திப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் "சின்கோனா" மற்றும் "ஜெரேனியம்" பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

அரசுப் பேருந்துகளுக்கான உதிரி உறுப்புகள்.

*688 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுப் பேருந்து போக்குவரத்துத் துறைக்கு உதிரி உறுப்புக்கள் கிடைக்காத காரணத்தால் பழுதடைந்த பஸ்களைப் பழுது பார்க்கப் படுவது தடைபட்டுள்ளது என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்போது தமிழக அரசு பேருந்துகளுக்கான உதிரி பாகங்கள் எந்தெந்த கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகின்றது என்பதையும், அவைகளை வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும், அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டு இருக்கும் நடவடிக்கைகளையும் அறிவிக்கக் கோருகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த அரசுப் போக்குவரத்துத் துறையிலே உள்ள பஸ்களுக்கு 'அசோக் லேலண்டு லிமிடெட், மெசர்ஸ் டாடா இன்ஜினீரிங் அண்டு லோகோ மோடிவ் கம்பெனி, மெசர்ஸ் பை—மெடல் பேரிங்ஸ் லிமிடெட்

இந்தியா பிஸ்டன்ஸ், லூகாஸ்—டி.வி.எஸ்., பெஸ்ட் அண்டு கம்பெனி, பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சுந்தாம் கிளேடன் ஹிந்துஸ்தான் பெரடோஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து பல்வேறு பாகங்கள் வாங்கப்படுகின்றன. பாகங்கள் (உதிரி உறுப்புகள்) சரிவரக் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் இம்போர்ட்–ரெஸ்டிரிக்ஷன், வெளிநாட்டுச் செலாவணி பெறுவதில் இருக்கும் கஷ்டம், மூலப்பொருள் கள் கிடைக்காமல் இருப்பது (ஸ்கேர்ஸிடி ஆப் ரா மெடீரியல்ஸ்) லேபர் அன்ரெஸ்ட் இவைகள் தான் காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார் கள். குறிப்பாக அண்மையில் நடந்த சிம்சன் கலவரத்தால் கூட அரசாங்கப் போக்குவரத்துத்துறை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, பல பெரிய பேருந்து நிறுவனங்கள் அவர்களுக்கு வேண்டிய சில உதிரி உறுப்புகளைத் தாங்களா கவே தயார் செய்து கொள்கிற முறையைப் பார்க்கிறோம். அதேபோல் அரசு பேருந்து நிறுவனமும், அதற்குத் தேவையான உதிரி உறுப்பு களை உற்பத்தி செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒரு பஸ்ஸுக்கு கிட்டத்தட்ட 7,500 உறுப்புகள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் நாமே செய்வது என்பது முடியாத காரியம். ஆனால் கூடுமானவரையில் இவற்றைச் செய்கிற நிறுவனங்கள் சென்னையைச் சுற்றி இருப்பதால் அவைகளைப் பெறுவதற்கான முறையை மேற்கொள் கிறோம். இங்கே இருக்கிற நிறுவனங்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு விட்டால் இன்னும் விரைவாக வாங்குவதற்கு எந்தெந்த நிறுவனங்கள் இத்தகைய உறுப்புகளை உற்பத்தி செய்கின்றன என்று பார்த்து, அவைகள் தரமானவைகளா என்று பார்ப்பதற்காக ஒரு டிரையல் ஆர்டர் கேட் கலாமா என்ற அளவில் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

Suggestions for improving bus routes

* 689 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the suggestions sent by various associations in the City of Madras to improve or to change or to start new routes are attended to by the Director of Transport; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பல்லவா போக்குவரத்துக் கழகம் ஏற்படுமுன் அக்கருத்துரைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநரால் கவனிக்கப்பட்டன. தற்போது கழகம் கருத் துரைகளைக் கவனிக்கிறது ;

(ஆ) இது குறித்துப் பல கருத்துரைகள் பெறப்பட்டன எனவே, அவற்றின் விவரங்களைத் தருவது இயலாததாகும்; ஆனால் பெறப்பட்ட ஒவ்வொரு கருத்துரையும் ஆய்வு செய்யப்படுகின்றது. ஏற்புடைய இடங்களி லெல்லாம் அவை செயல் படுத்தப்படுகின்றன.